**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109407

1. District : மாவட்டம் Virudhunagar | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 02/2024 | Date: நாள் 03.04.2024

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 02.04.2024 | Date to : நாள் வரை 16.00 hrs
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.04.2024 Time : நேரம் 11.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03.04.2024 Time : நேரம் 11.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Oral

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 25 Kms / South
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.மு.குட்டி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.முத்துகாளி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05.12.1982 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி எண்.546/5, சண்முக சிகாமணி நகர், பல்லக்கு ரோடு, பாண்டவர்மங்கலம், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு.முத்தையா, கிராம நிர்வாக அலுவலர், கத்தாளம்பட்டி கிராமம், சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
-தாமதம் இல்லை-

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து அனுப்பப்படுகிறது**

நான் இன்று 03.04.2024 முற்பகல் 11.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, பாண்டவர்மங்கலம், பல்லக்கு ரோடு, சண்முக சிகாமணி நகர், கதவு எண்.546/5 என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.முத்துகாளி என்பவரின் மகன் திரு.மு.குட்டி என்பவர் என் முன்பாக ஆஜராகி சொன்ன புகாரை முற்பகல் 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணிக்குள் அலுவலக கணினி மூலமாக தயார் செய்து, அந்த புகாரை பிரிண்ட் எடுத்து புகார்தாரரிடம் கொடுத்து படித்து பார்க்க சொன்னேன். அவர் படித்து பார்த்துவிட்டு அவர் சொன்னபடி சரியாக இருந்ததால், அந்த புகாரின் மூன்று பக்கங்களிலும் புகார்தாரர் திரு.மு.குட்டி தனது கையொப்பத்தை இட்டும், கைரேகை வைத்தும் அந்த புகாரை என்னிடம் வழங்கினார். மேற்படி புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. குட்டி

3.4.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

03.04.'24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

K.RAMACHANDRAN
ADSP VAC VNR (001

Name: பெயர் ...........................
Rank: நிலை ....................No. எண் .........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

03.04.2024 at 14.45 hrs.

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.02/2024 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

03.04.2024 நண்பகல் 13.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.முத்தையா, கிராம நிர்வாக அலுவலர், கத்தாளம்பட்டி கிராமம், சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2024 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.மு.குட்டி அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- திரு.மு.குட்டி, வயது 41/2024, த/பெ.முத்துகாளி, எண்.546/5, சண்முக சிகாமணி நகர், பல்லக்கு ரோடு, பாண்டவர்மங்கலம், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் என்பவர் இன்று 03.04.2024 முற்பகல் 11.00 மணிக்கு என் முன்பாக ஆஜராகி சொன்ன புகார் விபரம் பின்வருமாறு:- நான் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, பாண்டவர்மங்கலம், பல்லக்கு ரோடு, சண்முக சிகாமணி நகரில் வசித்து வருகிறேன். கோவில்பட்டியில் எனக்கு சொந்தமான வீடுகளை வாடகைக்கு விட்டும், கோவில்பட்டி சண்முகா தியேட்டர் பின்புறம் நீச்சல்குளம் அமைத்து பொதுமக்களுக்கு வாடகை அடிப்படையில் குளிக்க அனுமதித்தும், மேலும் இடம் வாங்கி விற்கும் தொழிலும் செய்து வருகிறேன். எனக்கு சரியாக எழுத தெரியாது. ஆனால் படிக்க தெரியும். நான் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், கத்தாளம்பட்டி கிராமத்தில் வசிக்கும் பெரிய கோவிந்தன் மனைவி நிலமுடையாள் (எ) பார்வதி என்பவருக்கு சொந்தமான பட்டா எண்.222-இல் உள்ள 41.50 ஏர் புஞ்சை நிலத்தை சாத்தூர் சார்பதிவக ஆவண எண்.8388/2008-இன்படி 23.10.2008-ஆம் தேதி எனது பெயருக்கு கிரையம் பெற்றேன். அவ்வாறு கிரையம் பெற்ற மேற்படி நிலத்தை எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி கடந்த மாதம் சாத்தூர் தாலுகா அலுவலகத்தில் மனு கொடுத்தேன். அந்த பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி கொடுத்த மனு சம்மந்தமாக கடந்த வாரம் ஒருநாள் காலை சுமார் 10.00 மணியளவில் கத்தாளம்பட்டி கிராம நிர்வாக அலுவலகம் சென்று, அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் திரு.முத்தையா அவர்களை சந்தித்து விபரம் கேட்டேன். அப்போது அவர் என்னிடம், உங்களது மனு எனது பார்வைக்கு வந்துள்ளது, அதை நான் பார்த்துவிட்டேன், உங்க பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய நான் தான் பரிந்துரை செய்ய வேண்டும். அதற்கு பணம் ரூ.15,000/- செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான் என்ன சார், ஆவணங்களெல்லாம் கரெக்டாதானே சார் இருக்கு, வில்லங்கம் ஒன்னும் இல்லைல சார் என்று சொன்னேன். அதற்கு அவர், ஏங்க, பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி மனு செய்யுறவங்க எல்லார்கிட்டேயும் கேக்குரதுதாங்க, உங்ககிட்ட மட்டும் கேக்கலங்க என்று சொன்னார். அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இருந்தாலும் அப்போது நான் அவரிடம், சார் தற்செயலாகத்தான் உங்கள பார்க்க இப்ப

வந்தேன். தற்போது என்னிடம் நீங்க கேட்கும் ரூ.15,000/- பணம் இல்ல சார், எனக்கு சொந்தமான இன்னொரு நிலத்திற்கும் பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது சார் என்று சொன்னேன். அதற்கு விஏஓ, அப்படின்னா இப்ப நீங்க பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி கொடுத்த மனுவை பரிந்துரை செய்து அனுப்பிடுறேன். நீங்க சொன்ன இன்னொரு நிலத்திற்கு பட்டா பெயர் மாற்றம் (LTI of M.KUTTY (sd) M.குட்டி 3.4.2024) செய்யவுள்ளதை இ-சேவை மையத்தில் பதிவு செய்துவிட்டு, என்னை வந்து பாருங்க என்று சொன்னார். அவர் சொன்னதுபோல நான், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், கத்தாளம்பட்டி கிராமத்தில் வசிக்கும் திரு.தர்மராஜ் மனைவி திருமதி.ஜானகி என்பவருக்கு சொந்தமான மேற்படி கிராம சர்வே எண்.25/1A-இல் உள்ள 76.5 செண்ட் புஞ்சை நிலத்தை சாத்தூர் சார்பதிவக ஆவண எண்.11454/2022-இன்படி 08.11.2022-ஆம் தேதி எனது பெயருக்கு கிரையம் பெற்ற மேற்படி நிலத்தை எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி நேற்று (02.04.2024) சாத்தூரிலுள்ள இ-சேவை மையத்தில் தேவையான ஆவணங்களை சமர்ப்பித்து உரிய அரசு கட்டணம் செலுத்தி பதிவேற்றம் செய்தேன். அதற்காக எனக்கு ஒரு ஒப்புகைசீட்டு தந்தார்கள். அந்த ஒப்புகைசீட்டுடன் நேற்று மாலை சுமார் 04.00 மணியளவில் கத்தாளம்பட்டி கிராம நிர்வாக அலுவலகம் சென்று, அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் திரு.முத்தையா அவர்களை சந்தித்து பட்டா பெயர் மாற்றம் தொடர்பாக இ-சேவை மையத்தில் பதிவு செய்த ஒப்புகைசீட்டை அவரிடம் காண்பித்து விபரம் கேட்டேன். அப்போது அவர் என்னிடம், போன பட்டா பெயர் மாற்றத்திற்கு ரூ.15,000/- கேட்டேன். அப்போது தற்செயலாகத்தான் என்ன பார்க்க வந்தேன்னு சொல்லி, நான் கேட்ட ரூ.15,000/- இல்லைன்னு சொல்லிட்டு போனீங்க. இருந்தாலும் நீங்க ரூ.15,000/- பணத்தை கொடுத்திருவீங்க என்ற நம்பிக்கையில் அந்த பட்டா பெயர் மாற்றத்திற்கு நான் பரிந்துரை செய்து, உங்க பெயருக்கு பட்டா மாறுதலும் ஆகிவிட்டது. இப்ப இந்த பட்டாவிற்கு பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்யனும்னா, ஏற்கனவே பட்டா பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்ததற்கும், இந்த பட்டா பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்வதற்கும் சேர்த்து ரூ.30,000/- கொடுங்க என்று சொன்னார். நான் அப்பொழுது, சார் இவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்றும், என்னால இவ்வளவு பணம் புரட்ட முடியாதுங்கசார் என்றும் சொன்னேன். அதற்கு அவர், ரூ.5,000/-த்தை குறைச்சிட்டு ரூ.25,000/- பணத்தையாவது கொடுங்கள் என்றும், கடைசி தடவை மாதிரி, இந்த தடவையும் கொடுக்கலைன்னா, இந்த பட்டா பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்யமாட்டேன் என்றும், பட்டா பெயர் மாற்றம் செய்ய முடியாத அளவிற்கு சிக்கலை உண்டு பண்ணிவிடுவேன் என்றும் கண்டிப்புடன் கூறினார். அப்போதும் அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை, இருந்தாலும் நான் அப்போது அவரிடம், வேறுவழியில்லாமல், சரி என்று

சொல்லிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். என்னுடைய பெயரில் உள்ள 2 இடங்களில் ஒரு இடத்திற்கு என்னுடைய பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்ததற்கும், மற்றொரு இடத்திற்கு பட்டா பெயர் மாற்றம் (LTI of M.KUTTY (sd) M.குட்டி 3.4.2024) செய்ய பரிந்துரை செய்வதற்கும் வி.ஏ.ஓ திரு.முத்தையா என்னிடம் கேட்ட ரூ.25,000/- பணத்தை தற்போது கொண்டு வந்துள்ளேன். எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட கத்தாளம்பட்டி வி.ஏ.ஓ திரு.முத்தையா மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் இந்த வாய்மொழி புகார் வாக்குமூலத்தினை தங்களிடம் சொல்ல சொல்ல, அதனை தாங்கள் கணினியில் தட்டச்சு செய்து, அதை பிரிண்ட் எடுத்து என்னிடம் கொடுக்க, நான் அதை படித்தும் பார்த்தேன். அதில் நான் சொன்னபடி சரியாக இருந்தது. Typed by, (sd) G.Thathappa Baskar 03/4/24 (G.THATHAPPA BASKAR) PC – 4001) (LTI of M.KUTTY (sd) M.குட்டி 3.4.2024) Sir, Recorded by me between 11.00 hrs and 12.00 hrs on 03.04.2024 and also received the same. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.02/2024 u/s. 7 of the P.C. Act 1988 amended in 2018 on 03.04.2024 at 13.00 hrs and took up for investigation. (Sd) (K.Ramachandran) 03.04.2024 (K.RAMACHANDRAN) ADSP/V&AC/VNR(OD).

The original FIR along with original complaint are submitted to the court of the CJM cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

03.04.24

(K.RAMACHANDRAN)
ADSP/V&AC/VNR(OD)